# மன்னார்க்கோட்டை



தமிழ் நாடு அரசு
தொல்லியல் துறை சென்னை - 600 008.
2013

முனைவர் **சி.வசந்தி,** எம்.ஏ., எம்பில்., பிஎச்.டி.
ஆணையர் பொறுப்பு

தொல்லியல் துறை
தமிழ் வளர்ச்சி வளாகம்
ஆல்சு சாலை
சென்னை - 600 008.
நாள் : 31-10-13.

# பதிப்புரை


தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை மாவட்டம் தோறும் தொல்லியல் மேற்பரப்பு ஆய்வினை மேற்கொண்டு தமிழக வரலாற்றிற்கு அணி சேர்க்கும் வகையில் பல அரிய கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்தி வருகின்றது.

மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு. முனைவர் வைகைச் செல்வன் அவர்களால் 11.03.2013 அன்று தொல்லியல் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்யும் போது விருதுநகர் மாவட்டம் மன்னார்க்கோட்டை என்ற இடத்தினை ஆய்வு செய்யுமாறு அறிவுறுத்தினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க மதுரை மண்டல உதவி இயக்குநர் திரு நா. கணேசன், இப்பகுதியினை திரு. ஒளிமாலிக் உதவி செயற்பொறியாளர் பொறுப்பு அவர்களுடன் ஆய்வு செய்தார். இவ்வாய்வு விவரங்கள் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டதில், இவ்வாய்வு விவரங்களை சிற்றேடு/சிறுநூலாக (Brochure / Book-let) தொல்லியல் துறை மூலம் வெளியிட அரசு (கடித எண் : 8956/ அதொ-2/2013 - 1, நாள் : 17.10.2013 ) தெரிவித்தற்கிணங்க இச்சிறுநூல் (Book-let) இத்துறை மூலம் வெளியிடப்படுகின்றது.

விருதுநகர் மாவட்டம் மன்னார்க்கோட்டை சிறுநூலினை வெளியிட தெரிவித்த அரசுக்கும், மன்னார்க்கோட்டை ஆய்வு செய்த திரு. நா. கணேசன் மண்டல உதவி இயக்குநர், மதுரை மற்றும் திரு. ஒளிமாலிக் உதவி செயற்பொறியாளர் பொறுப்பு மதுரை அவர்களுக்கும் எனது பாராட்டுகள். இச்சிறு நூலை அச்சிட்ட எம் துறை அச்சுப்பிரிவினருக்கு வாழ்த்துகள். மன்னார்க்கோட்டை என்ற இச்சிறுநூல் எம் துறையால் வெளியிடப்படுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

தி. வசந்தி


# மன்னார்க்கோட்டை



மன்னார்க்கோட்டை ஊரின் தோற்றம்

மன்னார்க்கோட்டை என்ற ஊர் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டத்தில் மதுரை – திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலையில் மதுரையிலிருந்து சுமார் 77–கி.மீ. தொலையில் அமைந்துள்ளது. துலுக்கப்பட்டி என்ற ஊரிலிருந்து கிழக்கு திசையில் சுமார் 10–கி.மீ. சென்றால் மன்னார்க்கோட்டையை அடையலாம். இவ்வூர் கி.மு.3–ம் நூற்றாண்டு முதல் கி.பி.18–ம் நூற்றாண்டு வரை சிறந்து விளங்கியதை இவ்வூரில் கண்டறியப்பட்ட வரலாற்று எச்சங்கள் உணர்த்துகின்றன. ஊரின் கிழக்குப் பக்கத்தில் சிவக்காடு என்று மக்களால் அழைக்கப்படும் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த (கி.மு.3–கி.மு.1) ஈமக்காடு அமைந்துள்ளது. ஊரின் வடபுறம் “நத்தக்காடு” என்று அழைக்கப்படும் வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த (கி.பி.1–கி.பி.3) வாழ்விடப்பகுதி அமைந்துள்ளது. கி.பி.10–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த “தலைப்பலி நடுகல்” கல்வெட்டொன்று நத்தமேட்டுப்பகுதியில் சிவாலயத்திற்கருகில் காணப்படுகின்றது. கி.பி.13–ஆம் நூற்றாண்டில் எடுப்பிக்கப்பட்டு பல்வேறு


காலக்கட்டங்களில் புனரமைப்பு செய்யப்பட்ட சிவாலயம் நத்தமேட்டுப் பகுதியில் உள்ளது. இக்கோயில் இறைவன் தியாகராஜ சுவாமி என்றும் இறைவி கமலவள்ளி என்றும் அழைக்கப்படுகின்றனர். இக்கோயிலில் கல்வெட்டுகள் இருந்து சிதைந்துள்ளன.



**சிவாலயம் - நத்தமேடு**

நத்தக்காட்டுப் பகுதியின் கிழக்குப் பக்கத்தில் வாளவந்தாளம்மன் என்றும் பத்திரகாளியம்மன் என்றும் மக்களால் அழைக்கப்படும் காளிக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலின் அருகில் கி.பி. 10–ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் பொறிக்கப்பட்ட தமிழ் கல்வெட்டு ஒன்று தனிக்கல்லில் இரண்டு வரிகளில் மட்டும் காணப்படுகின்றது. இக்கோயில் தற்போது புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது. இங்குள்ள கல்வெட்டு அருகில் உள்ள சிவாலயத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டாகவோ அல்லது கி.பி. 10–ஆம் நூற்றாண்டு வாக்கில் எடுப்பிக்கப்பட்டு தற்போது இடித்து புனரமைப்பு செய்யப்படும் காளிக்கோயிலில் இருந்த கல்வெட்டாகவோ இருக்கலாம். முழுமையான கல்வெட்டு கிடைக்கப்பெறாததால் அக்கல்வெட்டின் காலம், அக்கல்வெட்டில் பொறிக்கப்பட்ட வரலாற்றுச் செய்தி, அவ்வரலாற்று செய்திக்குரிய மன்னன், அம்மன்னன் வழங்கிய கொடை பற்றிய விவரம், எந்தக் கோயிலுக்கு கொடை வழங்கப்பட்டது என்ற விவரம் ஆகியவற்றைக் கண்டறிய இயலவில்லை.

நத்தமேட்டிற்கு கிழக்கு பக்கத்தில் சுமார் 277 ஏக்கர் பரப்பளவு கொண்ட மிகப்பெரிய கண்மாய் ஒன்று உள்ளது. இக்கண்மாயை இவ்வூர் மக்கள் "பெரியகுளம்" கண்மாய் என்று அழைக்கின்றனர். இக்கண்மாயில் நான்கு பக்கங்களிலும் நான்கு மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மதகுகளின் வாயிலாக கொண்டு செல்லப்படும் தண்ணீரைக்கொண்டு ஆவுடையாபுரம், மன்னார்க்கோட்டை, குமாரபுரம் ஆகிய ஊர்கள் பாசன வசதி பெறுகின்றன. கண்மாயின் மேற்குப் பக்க கரையில் தனியாக மதகு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இம்மதகிலிருந்து வெளியேறும் தண்ணீர் அருகிலுள்ள "நீராவி" என்று குளியல் குளத்தை நிரப்பி வழிந்துசெல்லும் தண்ணீர் பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்குளியல் குளத்தின் தென்புறம் "பாண்டிக்கோயில்" அமைந்துள்ளது. கண்மாயில் நீர் நிரம்பி பாசனத்திற்கு ஆடி மாதம் தண்ணீரை வெளியேற்றும்பொழுது இக்கோயிலில் பூஜைகள் நடைபெறும் என்று ஊர் மக்கள் தெரிவித்தனர்.




மண்டபம்

ஊரின் தென்புறம் தற்போது எவ்வித வரலாற்றுச் சுவடுகளும் கிடைக்காத இடத்தில் மன்னார்க்கோட்டை ஜமீன் வாழ்ந்ததாக ஊர் மக்கள் தெரிவித்தனர். இவ்விடத்தில் தற்போது வேளாண்மை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மன்னார்க்கோட்டை ஜமீன் கோல்வார்பட்டி

ஜமீனுக்கு கட்டுப்பட்டதாக இருந்துள்ளது. கி.மு.3–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.18–ஆம் நூற்றாண்டு வரை சிறந்த வரலாற்றுப் பெருமைகளைக் கொண்ட ஊராக மன்னார்க்கோட்டை விளங்கியுள்ளது. இங்கு ஜமீனுக்கு சொந்தமான கோட்டை இருந்துள்ளதாக ஊர் மக்கள் தெரிவித்தனர். இவ்வூரில் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர்.


இப்பகுதியில் அடித்தட்டு மக்களை "குடிமக்கள்" என்று இன்று வரை அழைப்பது பெருங்கற்கால மக்களின் சமூக கட்டமைப்பை நினைவுபடுத்துவதாக உள்ளது. மனித இனம் தோன்றி பண்பாட்டு ஓர் இடத்தில் தங்கி குழுவாக வாழ்ந்த காலகட்டத்தில் குடிகளாகவும் பல



**சிவாலயத்தின் முகப்புத்தோற்றம் - நத்தமேடு**

குடிகள் இணைந்த ஊராகவும் வாழ்ந்துள்ளனர். அக்காலகட்டத்தில் ஊர் மக்களின் அனைத்துத் தேவைகளையும் அவ்வூரிலிருந்த அனைத்துக் குடிமக்களும் இணைந்து நிறைவு செய்து வந்தனர். கால மாற்றத்தின் காரணமாக சமூகத் தேவையை ஒன்றுபட்டு நிறைவேற்றிய இனக்குழு வாழ்க்கையிலிருந்து மாறி தொழில் சார்ந்த குடிகளாக உருவெடுத்தனர். அக்காலகட்டத்தில் ஒவ்வொரு தொழிற்குடியும் தம் குடிகளை தற்காத்துக்கொள்வதற்காக தம் குடிக்குள் கட்டுப்பாடுகளையும், ஒற்றுமையையும் உருவாக்கிக் கொண்டு தம் குடிகளின் தேவையை நிறைவு செய்வதற்கு குடிமகன்களை நியமித்துக்கொண்டனர். இத்தகைய

வரலாற்று மாற்றத்தின் எச்சமாகத்தான் "குடிமகன்" என்ற சமூக மக்களையும் அச்சொல்லையும் நோக்க வேண்டியுள்ளது.



**இந்நூலாசிரியர் கள ஆய்வில் நேர்காணல்**

இங்குள்ள சிவாலயத்திற்கு அருகில் தனிக்கல்லில் காணப்படும் கி.பி.10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த "தலைப்பலி" நடுகல் கல்வெட்டில் அறிய வரலாற்றுச் செய்தி பொறிக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டு மன்னன் பிற நாட்டின் மீது படையெடுத்து செல்லும்பொழுது தனக்கு வெற்றி கிட்டுவதற்காக காளியிடம் வேண்டுதல் செய்து, வெற்றி கிட்டியவுடன் காளிக்கு கொடையளித்து விழா எடுப்பது தமிழர்களின் வழக்கமாக இருந்துள்ளது. இந்நிகழ்வுகளை சங்க இலக்கியங்களில் காணலாம். வீரன் ஒருவன் வணிகக்குழு தலைவனுக்காக காளியிடம் வேண்டுதல் செய்து, வேண்டுதல் நிறைவேறியவுடன் அவ்வீரன் தனது தலையை தானே அறிந்து காளிக்கு காணிக்கையாகக் கொடுத்த அறிய வரலாற்றுச் செய்தி இக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. கி.பி.10-ஆம் நூற்றாண்டில் இதுபோன்ற நிகழ்வுகள் தமிழ்நாட்டின் பல இடங்களில் நடைபெற்றுள்ளதை கல்வெட்டுகள், இலக்கியங்கள், கற்சிற்பங்கள் மூலம் அறியமுடிகிறது.

மன்னார்க்கோட்டையில் கிடைத்த தலைப்பலி நடுகல் கல்வெட்டு:

1. சூரங்குடி

2. நாட்டு ஆ

3.தனூரார

4.கையம்

5.ஊர்கிழவன்

6.ஸ்ரீவேழா

7.ன் சீலப்பு

8.கழான் க

9.லியுகக் கண்


10.டடி தன்

11.மசெட்டிக்கு

12.கோன் நோ

13.ற்றி தலை

14.தந்தான்



**வாளவந்தாளம்மன் என்றும் அழைக்கப்படும் பத்திரகாளியம்மன் கோயில்**

. . . . . . . என்ற கல்வெட்டில் ஸ்ரீ வேளாண் சீலப்புகழான் ஸ்ரீகலியுக கண்டடி தன்மச்செட்டி என்ற வணிகக்குழு தலைவனுக்காக சூரங்குடி நாட்டு ஆதனூரைச் சேர்ந்த் ஊர்க்கிழவன் காளியிடம்

வேண்டிக்கொண்டு தன் வேண்டுதல் நிறைவேறியதால் தன் தலையை தானே அரிந்து காணிக்கையாக கொடுத்துள்ளான். இவ்வரலாற்று நிகழ்வு கி.பி.10-ஆம் நூற்றாண்டில் நடைபெற்றுள்ளது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளும் முதலாம் இராஜராஜ சோழனின் ஆளுகைக்குட்பட்டிருந்தது.

அக்காலகட்டத்தில் வணிகம், நாடு முழுவதும் பறந்துபட்ட அளவில் சிறப்பாக இருந்துள்ளது. அதனை உறுதிப்படுத்தும் வகையில் தமிழ்நாட்டின் பல இடங்களில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த வணிகக்குழு கல்வெட்டுகளும், வணிகப்பெருவழிகளும், கண்டறியப்பட்டுள்ளன. அவ்வரலாற்று நிகழ்வின் எச்சமாகத்தான் இங்குள்ள கல்வெட்டினை காணமுடிகிறது. கி.பி.10-ஆம் நூற்றாண்டில் சிறப்புற்றிருந்த வணிகத்தைப்போன்று அவ்வணிகத்தை மேற்கொண்ட வணிகக் குழுக்களும் மக்களால் போற்றப்பட்டன. மன்னார்க்கோட்டையில் இருந்த வணிகக்குழு தலைவன் ஸ்ரீவேளாண் சீலப்புகழான் கலியுக கண்டடி தன்மச்செட்டியும் மக்களால் போற்றப்பட்ட வணிகக்குழு தலைவனாக விளங்கியதால் ஆதனூர் ஊர்க்கிழவன் அவனுக்காக தன் தலையை அரிந்து காளிக்கு காணிக்கையாக கொடுத்துள்ளான். இவ்வரலாற்று நிகழ்வு மன்னார்க்கோட்டையில் நிகழ்ந்துள்ளது. கி.மு.3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.18-ஆம் நூற்றாண்டு வரை சிறந்த வரலாற்று நிகழ்வுகளை தன்னகத்தே கொண்டு விளங்கிய பெருமை மிக்க ஊர் மன்னார்க்கோட்டை.



**மரத்துடன் உள்ள பெரியகுளம் கண்மாய்**

## கல்வெட்டுகள்

